செய்தி வெளியீடு எண் : 278 நாள்: 26.02.2022

# செய்தி வெளியீடு

## உக்ரைன் நாட்டில் போர்ச்சூழலில் சிக்கியுள்ள தமிழக மாணவர்களை நேரடியாக காணொலி அழைப்பு வாயிலாகத் தொடர்பு கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் அங்கு நிலவும் சூழல் குறித்து கேட்டறிந்தார்.

கடந்த சில நாட்களாக ரஷ்யா நாட்டு ராணுவம் உக்ரைன் நாட்டிற்குள் நுழைந்து ராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதால் உக்ரைன் நாட்டில் பதட்டமான சூழ்நிலை நிலவி வருகிறது.

உக்ரைன் நாட்டில் உயர்கல்வி பயில்வதற்காகச் சென்று தங்கியுள்ள தமிழக மாணவர்களை விரைந்து மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே கடிதம் வாயிலாக வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்நிலையில் அங்கு நிலவிவரும் போர்ச் சூழ்நிலையால் பாதிக்கப்பட்டு உடனடியாக தாயகம் திரும்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாணவர்களும் தமிழ்நாட்டில் வாழும் அவர்களின் பெற்றோர்களும் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். மாணவர்களை உடனடியாக தாயகம் அழைத்து வருவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், அவ்வாறு உடனடியாக அழைத்து வருவதற்கான பயணச் செலவையும் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொள்ளும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. மாணவர்களும் பெற்றோர்களும் தொடர்பு கொள்வதற்கு உடனடியாக மாநில கட்டுப்பாட்டு அறையில் இதற்கென தனி குழு ஏற்படுத்தப்பட்டு, வெளிநாடு வாழ் தமிழர் நல ஆணையர் தலைமையில் குழுவின் தொடர்பு எண்களும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், உக்ரைன் நாட்டில் தற்பொழுது தங்கியுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த மருத்துவ மாணவர்களான ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி. மௌனி சுஜிதா, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வன். ஆண்டனி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வன். நவநீத ஸ்ரீராம் ஆகியோரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொலி அழைப்பு வாயிலாகத் தொடர்பு கொண்டு அங்குள்ள நிலவரம் குறித்து கேட்டறிந்தார். மேலும், அவர்களை மீட்பதற்கு தேவையான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது என்றும், தாங்கள் இருக்கும் இடத்தில் பாதுகாப்பாகவும், தைரியமாகவும் இருக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், பொதுத்துறைச் செயலாளர் முனைவர் டி. ஜகந்நாதன், இ.ஆ.ப., அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு ஆணையர் திருமதி ஜெசிந்தா லாசரஸ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

.......

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**